நாள் 20.09.2021 - திங்கள் கிழமை

**OS. No.** 96/2014

PW1 செல்வம், த/பெ. சிவநேசன்

2, 3 பிரதிவாதிகள் தரப்பில் சத்திய பிரமாணம் செய்துவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை

இவ்வழக்கு சம்பந்தமான விவரங்களை நான் தான் சொன்னேன். தங்கவேல் பிள்ளை மற்றும் முல்லையம்மாள் இருவரும் என்னுடைய தாத்தா, பாட்டி ஆவார். என்னுடைய அப்பா 1ம் பிரதிவாதி தங்கவேல் பிள்ளை மற்றும் முல்லையம்மாள் அவர்களுக்கு மூத்த மகன் ஆவார். தாவா சொத்து தங்கவேல் பிள்ளை மற்றும் முல்லையம்மாள் இருவருக்கும் சொந்தமானது. நானும், என் தகப்பனாரும் ஒரே வீட்டில் வசிக்கிறோம் என்றால் சரியல்ல. நான் கொட்டுர் கிராமத்தில் வடக்குத் தெருவில் வசித்து வருகிறேன், எனது அப்பாவும் கொட்டுர் கிராமத்தில் வடக்குத் தெருவில் வசித்து வந்தார் என்றால் சரிதான், தற்போது அங்கு இல்லை. வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் என்னுடைய அப்பா மேற்கண்ட முகவரியில் தான் வசித்து வந்தார். எனது அப்பாவுக்கும், எனக்கும் சுமூக உறவு இல்லை. கொல்லாபுர தாஜ்தீன் நிலம் எனது தாத்தா காலத்தில் இருந்து இருக்கிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாஜ்தீன் நிலத்தில் 4 மா நிலத்தை எனது தகப்பனாரும் 3 மா நிலத்தை எனது சித்தப்பாவும், 3 மா நிலத்தில் நடராஜ்ம் சாகுபடி செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். 17.07.1985 ல் எனது தகப்பனார், அவரது சகோதரர்களும் ஒரு ஆவணத்தை ஏற்படுத்தி கொண்டார்கள் என்றால் இல்லை. அதன் நகல் என்னிடம் இல்லை. 2ம் பிரதிவாதி பாலகிருஷ்ணனுக்கு எனது பாட்டி முல்லையம்மாள் 15.07.2002 ல் செட்டில்மெண்ட் கொடுத்தார் என்றால் அவ்வாறு எதுவும் கொடுக்கவில்லை. 2, 3 பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் என்ன எதிர்வாதம் செய்கிறார்கள் என்பது பற்றி எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதி பாலகிருஷ்ணன் வீடு கட்டி குறைந்தது 10 வருடங்கள் இருக்கும். 3ம் பிரதிவாதி நடராஜன் என்பவர் 2 முதல் 3 வருடத்திற்கு முன்பு தான் வீடு கட்டினார். தற்போது எனக்கு 42 வயதாகிறது. 2, 3 பிரதிவாதிகள் வீடுகள் கட்டும்போது அப்போதே நான் ஆட்சேபணை தெரிவித்தேன். 2, 3 பிரதிவாதிகள் 15 வருடங்களுக்கு முன்பாகவே வீடுகள் கட்டியுள்ளார்கள் என்றாலும், நான் அதற்கு ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்றாலும் சரியல்ல. 4ம் பிரதிவாதி விஸ்வநாதன் 1982 லிருந்து சேலத்தில்

வசித்து வருகிறார் என்றால் சரிதான். அங்கேயே வீடு கட்டி அவர் நிரந்தரமாக வசித்து வருகிறார். 2ம் பிரதிவாதி பம்பாயில் வேலை பார்த்துவிட்டு வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தங்கவேல் பிள்ளையின் வாரிசுகள் 1985 ல் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து அதனை உறுதி செய்ய 17.07.1985 ல் ஒரு ஆவணம் எழுதி கொண்டார்கள் என்றாலும், அதில் எனது தகப்பனாரும் ஒரு தரப்பினராக இருந்து கையொப்பம் செய்துள்ளார் என்றாலும், பின்னிட்டு அதில் உரிமை கோர முடியாது என்பதால் என் தகப்பானர் என்னை தூண்டி விட்டு நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கில் பாகப்பிரிவினை கோருவதற்கு எனக்கு உரிமையல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்து அல்ல என்றால் சரிதான். தாவா சொத்தை பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாவா சொத்து பூர்வீக சொத்து அல்ல. வழக்கு சொத்துகளை எனது தகப்பனார் சம்பாதித்து அவருடைய பெற்றோர்கள் பெயரில் வாங்கியுள்ளார் என்று கூறுவது தவறு என்றால் சரியல்ல. எனது தகப்பனார் சிவநேசன், பாலகிருஷ்ணன், விஸ்வநாதன் ஆகியோர்கள் நடராஜனுக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விடுதலை பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் ஏதாவது தாவா சொத்து சம்பந்தமாக சார் பதிவாளர் அலுவலகத்தில் நகல் ஏதும் தாக்கல் செய்து வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். எனது பாட்டி முல்லையம்மாள் எழுதி கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் தான் 2, 3 பிரதிவாதிகள் வீடுகளை கட்டியுள்ளார்கள் என்றால் சரியல்ல. பாட்டி முல்லையம்மாள் எழுதி கொடுத்த ஆவணம் உண்மையானது என்று சொன்னால் சரியல்ல. 30.11.1976 ல் எனது தகப்பனாருக்கும், பெருமாளுக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையானது எங்கள் குடும்பத்தின் மூத்த உறுப்பினர் எனது அப்பா தான் என்பதால் தான் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது அப்பாவின் தனிப்பட்ட பணத்தில் தான் தாவா சொத்து வாங்கப்பட்ட து என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பாகப் பாத்தியம் கோருவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.